## உங்கள் கேள்வியும் வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமாரின் பதிலும்

**ஆதியாகமம் 1:20ன்படி ஜலத்திலிருந்து பறவைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், ஆதியாகமம் 2:19ல் பறவைகள் மண்ணினால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. வேதாகமத்தில் ஏன் இப்படி ஒரு முரண்பாடு உள்ளது.**

ஆதியாகமப் புத்தகத்தின் முதலிரு அதிகாரங்களுக்கும் இடையில் இருக்கும் முரண்பாடாகப் பலரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியமான ஒரு விஷயம், பறவைகளின் சிருஷ்டிப்பைப் பற்றியதாகும். ஆதியாகமம் 1:20ன்படி, தேவன் பறவைகளை ஜலத்திலிருந்து சிருஷ்டித்துள்ளார். ஆனால், ஆதியாகமம் 2:19ல் அவைகளைத் தேவன் மண்ணினால் உருவாக்கியதாகக் குறிப்பிடப்படட்டுள்ளது. இதனால், பறவைகளின் சிருஷ்டிப்பைப்பற்றி ஆதியாகமம் முரண்பாடான தகவல்களைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

பறவைகளின் சிருஷ்டிப்பைப்பற்றிய முரண்பாடு தமிழ் வேதாகமத்தில் மாத்திரமே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் நாம் தற்பொழுது உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் ஆதியாகமம் 1:20ல் ஒரு வாக்கியத்தைத் தவறவிட்டுவிட்டனர்.[1] இதனாலேயே பறவைகளும் தண்ணீரிலிருந்து சிருஷ்டிக்கப் பட்டதாக இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், “பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக் கடவது என்றார்” என்னும் வசனத்தில், “ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது” என்னும் வாக்கியம், “நீந்தும் ஜீவஜந்துக்களை” என்பதை அடுத்து வரவேண்டும். அதாவது, “பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களை ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது” என்று இவ்வசனம் ஆரம்பமாகவேண்டும். இதன்படி, நீர்வாழ் உயிரினங்களைத் தேவன் ஜலத்தில் உருவாக்கியுள்ளார் என்பதை அறிந்துகொள்கின்றோம்.

ஆதியாகமம் 1:20ன் இரண்டாவது வாக்கியத்தில், “பறவைகள் பறந்து திரியக்கடவது” என்னும் வாக்கியம் தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பாளர்களினால் தவறவிடப்பட்டுள்ளது. இவ்வாக்கியம் “பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும்” என்பதைத் தொடர்ந்து வரவேண்டும். இதன்படி இவ்வாக்கியம் “பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகள் பறந்து திரியக்கடவது” என்று இருக்கவேண்டும். எனவே, பறவைகள் ஜலத்தில் உருவாக்கப்பட்டன என்பது வேதாகமம் போதிக்கும் விஷயம் அல்ல.

[1] தமிழ் வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு பற்றிய விபரங்களுக்கு எனது *புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு* என்னும் நூலைப் பார்க்கவும்.

இது தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட தவறான ஒரு கருத்தாகவே உள்ளது.

ஆதியாகமம் 1:20ஐ நாம் சரியான விதத்தில் மொழிபெயர்த்தால், இவ்வசனம், "பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களை ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது, பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகள் பறந்து திரியக்கடவது என்றார்" என்று இருக்கவேண்டும். தமிழ் வேதாகமத்தின் புதிய மொழிபெயர்ப்புகளில் இத்தவறு திருத்தப்பட்டுள்ளது. மோனஹன் என்பவர் மொழிபெயர்த்த தமிழ் வேதாகமத்தில் இவ்வசனம், "திரள்திரளான ஜீவஜந்துக்கள் தண்ணீரிலே பலுகுக, பூமியின்மேல் ஆகாய மண்டலமாகிய வானத்தின் கீழே பறவைகள் பறந்து திரியக்கடவதென்று கடவுள் சொன்னார்" என்றும், இலகு தமிழ் மொழிபெயர்ப்பில், "அதன்பின் இறைவன் தண்ணீரில் உயிரினங்கள் பெருகட்டும். பூமிக்கு மேலாக ஆகாய வெளியெங்கும் பறவைகள் பறக்கட்டும் என்றார்" என்றும் திருவிவிலியத்தில் "அப்பொழுது கடவுள், திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்துக்கு மேலே பறவைகள் பறப்பனவாக! என்றார்" என்று இவ்வசனம் மூலமொழிக்கு ஏற்றவிதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்தில் பலரால் சுட்டிக் காட்டப்படும் ஒரு முரண்பாடு, வெளிச்சத்தின் சிருஷ்டிப்பைப் பற்றியதாகும். ஏனெனில், ஆதியாகமம் 1:3-5ன்படி, தேவன் முதலாம் நாளிலேயே வெளிச்சத்தைப் படைத்துள்ளார். ஆனால், இவ்வதிகாரத்தில் 14 முதல் 19 வரையிலான வசனங்களின்படி, தேவன் நான்காம் நாளிலேயே சூரியனைப் படைத்துள்ளார். சூரியனிலிருந்தே நமக்கு வெளிச்சம் கிடைப்பதனால், சூரியன் இல்லாமல் முதல் மூன்று நாட்கள் வெளிச்சம் இருந்ததாகக் கூறும் ஆதியாகம் 1:3-5, சூரியனுடைய சிருஷ்டிப்பை முரண்படுத்தும் வேதப் பகுதியாகப் பலரால் கருதப்படுகின்றது. அத்தோடு இது விஞ்ஞானரீதியாகப் பிழையாக இருப்பதாகவும் வேதவிமர்சகர்கள் குறிப்பிட்டுள் ளனர்.

சில கிறிஸ்தவர்கள், தேவன் முதலாம் நாளே சூரியனைப் படைத்துவிட்டார் என்றும், "நான்காம் நாளில் பூமியைச் சூழ்ந்திருந்த மேகங்கள் அகன்று வானம் தெளிவாகியதினால், முதலாம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட சூரியன் நான்காம் நாளில் மானிடக் கண்களுக்குத் தென்பட்டது"[2] என்றும், "முதலாம் நாளில் வெளிச்சம் தராத நிலையில் சிருஷ்டிக்கப்பட்டிருந்த சூரியனுக்கு நான்காம் நாளில் ஏதோ நடைபெற்றதனால், அது பிரகாசிக்கக்கூடியதாக மாறியது"[3] என்றும் கூறுகின்றனர்.[4] ஆனால், ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்ட சூரியன் நான்காம் நாளில் தென்பட்டது

[2] J.H.Sailhamer, *Genesis: The Expositor's Bible Commentary Volume 2*, p. 26; A.P.Ross, *Creation and Blessing: A Guide to the Study and Exposition of Genesis*, p. 111.

[3] H.C.Leupold, *Exposition of Genesis*, p. 71; N.Geisler & T.Howe, *When Critics Ask*: *A popular Handbook on Bible Difficulties*, p. 30.

[4] N.Geisler & T.Howe, *When Critics Ask*: *A popular Handbook on Bible Difficulties*, p. 30.

என்றோ, அல்லது பிரகாசிக்கத் தொடங்கியது என்றோ ஆதியாகமம் 1:14-19ல் குறிப்பிடப்படவில்லை. வானத்தின் சுடர்கள் அனைத்தும் நான்காம் நாளில் சிருஷ்டிக்கப்பட்டதாகவே இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.[5] எனவே, மனிதருடைய அறிவுக்கு ஏற்ற விதத்தில் வேதாகமத்தை வியாக்கியானம் செய்யும் இத்தகைய முறையைக் கிறிஸ்தவர்கள் பின்பற்றுவது தவறாகும்.

உண்மையில், ஆதியாகமம் 1:3-5 அறியத்தருவதுபோல, தேவன் முதலாம் நாளிலேயே வெளிச்சத்தைப் படைத்துள்ளார். சகல உயிரினங்களும் வாழ்வதற்கு வெளிச்சம் அவசியம் என்பதனை அறிந்திருந்த தேவன், சகலவற்றையும் சிருஷ்டிப்பதற்கும் முன்பு வெளிச்சத்தைப் படைத்துள்ளார்.[6] ஆனால், நான்காம் நாளில், சூரியனைச் சிருஷ்டித்த தேவன், தாம் ஏற்கனவே முதல் நாளில் உருவாக்கிய வெளிச்சம் சூரியனிலிருந்து வெளிவரும் விதத்தில், அந்த வெளிச்சத்தைச் சூரியனில் வைத்துள்ளார்.[7] இதனால்தான், "சூரியன்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் (தமிழில் "பெரிய சுடர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது) "ஒளி" என்னும் அர்த்தமுடையதாய் இராமல், "ஒளிதாங்கி" அதாவது "ஒளியைத் தாங்கிக்கொண்டிருக்கும் சுடர்" என்னும் அர்த்தமுடையதாய் உள்ளது.[8]

உண்மையில், சூரியன் இல்லாத நிலையிலும் வெளிச்சம் இருக்கக் கூடியது.[9] ஏனெனில், மின்னலின் ஒளி சூரியனிலிருந்து வருவதல்ல.[10] இதைப்போலவே கற்களை உராய்வதன் மூலம் வரும் வெளிச்சமும் சூரியனிலிருந்து வருவதல்ல. உண்மையில், சக்திமிகு இலத்திரன்களினால் உருவாகும் "ஈத்திரன்" என்னும் அலைகளிலேயே ஒளி இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எனவே, தேவன் முதல் நாளிலேயே இவ்விதமாக வெளிச்சத்தை உருவாக்கியுள்ளார். ஆனால், நான்காம் நாளில் இவ்வெளிச்சம் சூரியனிலிருந்து வரும்படி செய்துள்ளார். எனவே, ஆதியாகமத்தின் முதல் நாள் சிருஷ்டிப்புக்கும் நான்காம் நாள் சிருஷ்டிப்புக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

சூரியன் இல்லாத நிலையில் வெளிச்சம் இருக்கமுடியாது என்று எண்ணுவது அர்த்தமற்றது. ஏனெனில், இத்தகைய நிலை பரலோகத்தில் இருக்கும் என்பதை வெளிப்படுத்தல் 21:23 22:5 அறியத்தருகின்றது. இவ்வசனங்களில், "நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு" என்றும், "அங்கே இராக்காலமிராது. விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே

---

[5] D.F.Kelly, *Creation and Change: Genesis 1:1-2:4 in the Light of Changing Scientific Paradigms*, p. 203; K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 149.
[6] V.P.Hamilton, *Genesis: The New International Commentary on the Old Testament*, p. 119; J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, p. 44.
[7] J.Calvin, *Genesis: Geneva Series of Commentaries*, p. 83; Cassuto, Genesis, p. 44.
[8] L.Berkhof, *Systematic Theology*, p. 155.
[9] D.E.Gowan, *Genesis: International Theological Commentary*, p. 21.
[10] J.Appleby, *Genesis: Chapters 1-11*, p. 4.

அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவனே ஒளியாயிருப்பதனால், சூரியன் இல்லாத நிலையிலும் அவரால் வெளிச்சத்தைக் கொடுக்க முடியும்.[11] ஏனெனில், அவரே வெளிச்சத்தின் ஆரம்பமாக இருக்கின்றார். இதனால்தான் அவர் “ஒளியை வஸ்திரமாகத் தரித்துக் கொண்டிருப்பதாக” சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான் (சங்.104:2).[12] இஸ்ரவேல் மக்களுடைய வனாந்திரப் பிரயாணத்தில் அக்கினி ஸ்தம்பத்திலும், ஆசரிப்புக் கூடாரத்திலும் தேவனுடைய பிரசன்னமே மக்களுக்கு ஒளியாக இருந்தது (யாத்.24:15-18). இதனால்தான், எதிர்காலத்தில் சூரியனிலும் சந்திரனிலுமிருந்து அல்ல, தேவனிலிருந்தே வெளிச்சம் கிடைக்கும் என்று தீர்க்கதரிசிகள் முன்னறிவித்துள்ளனர் (ஏசா.60:19-20, யோவே.2:30-31, சக.14:7).[13] எனவே, சூரியன் இல்லாத நிலையிலேயே முதல் நாளில் தேவன் ஒளியை சிருஷ்டித்துள்ளார். ஏனெனில், “ஒளியாக இருக்கும் தேவன் (1யோவா.1:5), சூரியன் இல்லாமலேயே உலகுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கக் கூடியவராக இருக்கின்றார்.”[14]

[11] H.Morris, *The Remarkable Birth of Planet Earth*, p. 69; U.Cassuto, *A Commentary on the book of Genesis*, p. 42.
[12] K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 145.
[13] H.G.May, “The Creation of Light in Genesis 1:3-5” *Journal of Biblical Literature*. 58 (1939), pp. 203-211.
[14] V.P.Hamilton, *Genesis 1-17: The New International Commentary on the Old Testament*, p. 121.